சுமங்கள ஸ்தோத்ர சீரீஸ் : 9

கேது பகவான்

(ஆராதனை முறை, அஷ்டோத்தர சத நாம அர்ச்சனை, கவசம், மந்திரம், காயத்ரி, புராண வரலாறுகள் அடங்கியது)



நான்காம் பதிப்பு 1995] [விலை : ரூ. 3-00

கடலங்குடி பப்ளிகேஷன்ஸ்
38, நடேச அய்யர் தெரு,
தி. நகர் (பஸ் ஸ்டாண்ட் அருகில்)
சென்னை - 600 017 (INDIA.)

உ
ஸ்ரீராமஜெயம்



கேது பகவான்

ராகு, கேதுக்களைப் பற்றி அதிக விவரங்கள் புராணங்களில் காணப்படவில்லை. அத்துடன் வரலாறும் இரண்டுக்கும் பொதுவாகவே உள்ளது; திருக்காளத்தி நாதனை பூசித்தே இரண்டு கிரஹங்களும் பேறு பெற்றன.

கேது பகவானை ஞானகாரகன் என்றும் மோட்சத்தை அருளும் கிரகம் என்றும் சொல்வார்கள். கேதுக் கிரகம் நன்றாக ஒருவரின் ஜாதகத்தில் வலுத்திருந்தால் மத்திய வயதைத் தாண்டியதும், மனம் ஆத்மிக உண்மைகளில் பெரிதும் செல்லத் தொடங்கும். இந்த உலகமே மாயை என்ற உணர்வு மலரத் தொர்டங்கும். கேது சாயாக் கிரக மானதால் செவ்வாயின் பலனையே அவன் கொடுப்பான் என்று ஜோதிட நூல்கள் கூறுகின்றன. செவ்வாய் நன்கு அமைந்திருந்தால் தன் தசாபுக்தி காலங்களில் கேது சிறந்த பலனை அளிப்பான்.

பாற்கடலைக் கடைந்து அமுதம் எடுக்கத் தேவர்களும் அசுரர்களும் முனைந்தார்கள் அல்லவா? அமுதம் எல்லாவற் றையுமே தாங்களே எடுத்துக் கொள்ள வேண்டும் என்று பேராசையால், அகரர்கள் தேவர்களுடன் சண்டை இட்ட னர். அசுரர்களின் பலத்தைக் கண்டு பயந்த தேவர்கள் திரு மாலிடம் முறையிட்டார்கள். திருமால் மோகினி அவதா ரம் எடுத்து, அசுரர்களை மயக்கி அமுதத்தை பங்கீடு செய்ய வந்தார். அப்போது ராகு என்ற அசுரன் தேவரின் உருவில் சூரியனுக்கும் சந்திரனுக்கும் இடையில் அமர்ந்து மகாவிஷ்ணுவை ஏமாற்றி அமுதத்தை வாங்கிச் சாப்பிட் டான். சூரிய சந்திரர்களின் குறிப்பால் ராகுவின் செய்கை யை அறிந்த மோகினி, தன் கையிலிருந்தச் சட்டுவத்தால் அடித்து, சக்கரத்தால் ராகுவின் தலையை அறுத்தார் என் பது வரை கேதுவின் வரலாற்றுக்கும் கதை ஒன்றே தான்.

சக்கரத்தால் துண்டிக்கப்பட்ட பிறகும் இந்த இரண்டு துண்டங்களும் அமுதம் உண்டதால், இறவாமல் உயிருடன் வாழத் தொடங்கின. தலைப்பாகம் ராகுவென்றும் உடல் பாகம் கேது என்றும் பெயர் பெற்றன.

தங்கள் தவறான செய்கையால், மகாவிஷ்ணு தங் களைத் தண்டித்தார் என்பதை உணர்ந்த கேது பிறகு திரு மாலை நோக்கித் தவம் இயற்றினான். மகாவிஷ்ணுவின்

அருளால் கேதுவுக்குப் பாம்புத் தலையும் கிரகப் பதவியும் கிடைத்தன. செம்பாம்புத் தலையுடையவன் கேது என்று அபிதான சிந்தாமணி என்ற நூல் கூறுகிறது.

தலை வெட்டுண்ட கேது பகவான் தேவலோகத்திலிருந்து பூமியில் மலையம் என்ற இடத்தில் விழுந்தான். அங்கே வாழ்ந்து வந்த மினி என்ற அந்தணன் கேதுவை எடுத்து வளர்த்து வந்தான்.

அந்தணனிடம் வளர்ந்ததால், கேது ஆன்மிக உண்மைகளைக் கற்றறிந்தான். மனித வாழ்க்கை நிலையில்லாதது. பரமாத்மாவின் சொரூபமான ஆத்மா எல்லோருடைய உள்ளத்திலும் விளங்குகிறது. அந்த ஆத்மாவின் தன்மையைப் புரிந்து கொண்டு உலகாயதச் சுகங்களில் உடலும் உள்ளமும் நாட்டம் கொள்வதைக் கொஞ்சம்கொஞ்சமாகக் குறைத்துக் கொள்ளப் பழகவேண்டும். பரமானந்தச் சொரூபமான இறைவனைக் காணவேண்டும்.

மனித வாழ்க்கையில் பிறந்ததிலிருந்து இறக்கும் வரையில் ஜோதிச் சொரூபமான இறைவன் ஜீவாத்மாவினுள்ளே இருந்து தீப ஒளி போல் இயங்கி வருகிறான். தன்னுள் ஒளிமயமாய் இருக்கும் பரமாத்மச் சொரூபத்தைக்கண்டு, அந்த ஒளியின் ஜோதியில் ஐக்கியமான அந்தர்முகத் தியானம் செய்ய வேண்டும். மனித வாழ்க்கையில் மனிதன் உயர என்ன என்ன செய்ய வேண்டும் என்ற தத்துவ உண்மைகளை எல்லாம் கேது அந்த அந்தணப் பெரியாரிடம் கற்றுக் கொண்டான் என்று சித்தாந்தப் பஞ்சாங்கம் என்ற நூலில் காண்கிறது.

சங்கரர் போன்ற மகான்கள் கூறிய உயரிய தத்துவக் கருத்துகள் எல்லாம் இந்த நூலில் வருகின்றன. இவை அனைத்தையும் கேது அறிந்ததாகவும் தெரிகிறது. அதனால்தான் கேதுவை ஞானகாரகன் என்று சோதிட நூல்கள் கூறுகின்றன போலும். ''அற்றது பற்று எனின் உற்றது வீடு'' என்று பல பெரியவர்கள் அருளியிருக்கிறார்

கள். பற்றை ஒழித்தால் வீடாகிய மோட்சம் கிடைப்பதில் என்ன தடை இருக்கமுடியும்? வீடு, வாசல், மனைவி, குழந்தைகள், சுகம், துக்கம் என்பனவெல்லாம் மனித மனத்தைக் கட்டுப்படுத்தும் பந்தங்களாக உள்ளன.

ஃ ஃ ஃ

நவக்கிரக ஆராதனை முறை என்ற நூலில் கேதுவைப் பற்றிய இயல்புகள் சொல்லப்பட்டிருக்கின்றன. அவனுடைய நிறம் கறுப்பு என்றும் இரண்டு கரங்களை உடையவன் என்றும் பத்துக் குதிரைகள் பூட்டிய தேரில் உலா வருபவன் என்றும் அதில் கூறப்பட்டிருக்கிறது. ஒரு கை அபய ஹஸ்தமென்றும் மற்றதில் கதாயுதம் உள்ளதென்றும் தெரிகிறது. வேத மந்திரமாகிய 'கேதும் க்ருண்வன்' என்ற மந்திரம் சொல்கிறது; கொடி போன்ற ஆசனத்தில் வீற்றிருப்பவன் கேது. அந்தர் வேதி தேசத்தைச் சேர்ந்தவன். விசித்திரமான வண்ணம் உடையவன். வாயு திசைக்கு உரியவன். அவனுக்கு எட்டு பிள்ளைகள் உண்டு. கழுகு இவனுடைய வாகனம். பல வண்ணச் சந்தனமும் பல வண்ண மலர்களும் அவனுக்கு உகந்தவை. மேரு மலையை அப்பிரதட்சிணமாக்ச் சுற்றி வருபவன். கேதுவினுடைய அதிதேவதை சித்திரகுப்தன்; பிரத்யதி தேவதை பிரம்மா. தூம்ர கேது, லோக கேது, ஸர்வ கேது போன்ற பல பெயர்கள் கேதுவுக்கு உள்ளன. அஷ்டோத்தர சதநாம அர்ச்சனையில் கேதுவுக்கு வரும் பெயர்கள் பல, கேதுவின் குணத்தையும் பராக்ரமத்தையும் குறிக்கின்றன.

கேதுவுக்குப் பிடித்த ரத்தினம் வைடூரியம். கொள்ளு உகந்த தானியம். செவ்வல்லி மலர்களைக் கொண்டு கேதுவைப் பூஜிக்க வேண்டும். விருப்பமான சுவை புளிப்பு. சிவப்பு நீலம் மஞ்சள் முதலிய பல நிற மணிகள் வைத்து இழைத்த கிரீடத்தைக் கேது தரித்திருப்பதாக விச்வ கர்ம சிற்ப சாஸ்திரம் கூறுகிறது.

சங்கீத மும்மூர்த்திகளில் ஒருவரான முத்துசாமித் தீட்சிதர் இயற்றிய நவக்கிரக கீர்த்தனைகளில் கேதுவைப்பற்றியும் சாமா ராகத்தில் பாடியிருக்கிறார். ''அசுரர்களுக்குள் பெரியவன் கேது. மனித உடலாகிய பீடத்தில் இனிதே எழுந்தருளியிருப்பவன்; புதிதாய்ப் கிரகப்பதவியைப் பெற்ற ராகுவுடன் இணைந்திருப்பவன்; கோபம் கொண்டவன்; ஜைமினி கோத்திரத்தில் பிறந்தவன்; முக்கோண வடிவத்தைப் பெற்ற கொடியை ஏந்தியவன்; முருகனுக்கு வெண் கவரியை வீசி மகிழ்பவன்,; குணங்களையும் குறைகளையும் வென்ற ஞானிகளுக்குத் தலைவனாக விளங்குபவன்; கிரஹணம் உண்டாவதற்குக் காரணமானவன்: வானவீதியில் அப்பிரதக்ஷிணமாகச் சுற்றி வருபவன்.'' இப்படியெல்லாம் அந்தக் கிருதியில் சொல்லிக் கேதுக் கிரகத்தைப் பாராட்டியிருக்கிறார்.

அசுவனி, மகம், மூலம் ஆகிய நக்ஷத்திரங்களில் பிறந்தவர்களுக்கு ஆதியில் கேதுதசை; மொத்தம் ஏழு ஆண்டுகள்.

கேது பகவான் பூஜித்துப் பேறு பெற்ற ஒரே தலம் திருக்காளத்தி. பஞ்சபூதத்தலங்களில் இது ஒன்று. பிருத்வி, அப்பு, தேயு, வாயு, ஆகாசம் என்று ஐந்து தலங்கள். இந்த ஐந்து தலங்களும் பெயர் பெற்றவை. பிருத்வித் தலம் திருவாரூர். பிருத்வி என்றால் மண். புற்றிடங் கொண்ட பெருமானாக வன்மீக நாதர் இங்கே எழுந்தருளியுள்ளார். காஞ்சிபுரத்தையும் பிருத்வித் தலம் என்று கூறுவார்கள்.

அடுத்தது அப்புத் (நீர்த்) தலம்; திருவானைக் கோயில் கர்ப்பக் கிரகத்தில் எப்போதும் நீர் சுரந்து கொண்டே இருக்கும். இது அப்புத் தலம். அன்னை அகிலாண்டேசுவரி கோயில் கொண்டு அருள்பாலிக்கும் திருத்தலம் இது.

மூன்றாவது தேயு (நெருப்பு); திருவண்ணாமலை; ஜோதிச் சொரூபமாக உள்ளவர் அண்ணாமலைப் பெருமான். நான்காவது வாயுத்தலம்; அதுதான் திருக்காளத்தி.

காளஹஸ்தீசுவரர் கோயிலின் கர்ப்பக்கிரகத்தில் எப்போதும் எரிந்து கொண்டிருக்கும் தீபச்சுடர்களில் ஒன்று மட்டும் காற்றில் அசைவது போல் எப்போதும் ஆடிக் கொண்டே இருக்கும். ஐந்தாவது: ஆகாயத்தலம் சிதம்பரம்.

சிலந்தியும் பாம்பும் யானையும் இறைவனைப்பூஜித்துப் பேறு பெற்றதால் சீ + காளம் + அத்தி என்ற அந்தப் பிராணிகளின் பெயர் இணைந்து, சீகாளத்தி என்று அமைந்தது. தட்சிண கைலாயம் என்றும் இந்தத்தலத்தைக் கூறுவார்கள்

ஒரு காலத்தில் ஆதிசேடனுக்கும் வாயுபகவானுக்கும் இடையே, ''யார் அதிக பலசாலி?'' என்ற போட்டி ஏற்பட்டது. ஆதிசேஷன் இந்த உலகத்தையே தாங்கியிருப்பதாகக் கூறுவார்கள். இந்த மண்ணுலகத்தைத் தாங்கி நிற்க வேண்டுமென்றால் எவ்வளவு பலம் பொருந்தியவராக ஆதிசேஷன் விளங்க வேண்டும்! வாயுபகவானும் அதே அளவு வலுவுள்ளவர்தாம்! சீற்றங்கொண்ட புயலாக வாயு பகவான் வீசினால் பெரிய பெரிய மரங்களையும் கட்டிடங்களையும் ஒடித்து நொறுக்கித் தரைமட்டமாக்கி விடுவதை நாம் கண்டிருக்கிறோம். அதனால் இவர்களுக்குள் ஏற்பட்ட போட்டி தேவர்களுக்குள் பெருத்த உற்சாகத்தை ஏற்படுத்தியது.

மேருமலை மிகப் பெரியது. அந்தக் காலத்தில் இமயமலை கிடையாது. இமயம் பின்னர் தோன்றியதாகப் புவியியல் வல்லுநர்கள் கூடச் சொல்லுகின்றனர். இப்போதைய இமயமலையைப் போல் மேருமலை விண்ணளாவி நின்றது. ஆதிசேஷனுக்கு ஆயிரம் தலைகள் உண்டு என்று சொல்வார்கள். ஆயிரம் முடிகளாலும் மேருமலையை அழுத்திப் பிடித்துக் கொள்ள வேண்டும். வாயுபகவான் பெருங்காற்றை வீசி அம்மலையைப் பெயர்த்து விட வேண்டும். இதுதான் அவர்களிடையே எழுந்த போட்டி.

மேருமலையைப் பெயர்த்து விட்டால் வாயுவுக்கு வெற்றி உண்டாகும். முடியாவிட்டால் ஆதிசேஷனுக்கு வெற்றி. சம பலமுள்ள இரண்டு பேர் போட்டியில் இறங்கி

னால் விறுவிறுப்பு அதிகந்தானே! தேவர்கள் எல்லோரும் மிகுந்த அக்கறையுடன் பார்த்தார்கள். வாயுதேவன், தன் வலிமையை எல்லாம் காட்டி மலையைப் பெயர்க்க முயன்றான். ஆதிசேஷன் பிடியைத் தளர்த்தவில்லை. இந்தப் பலப் போட்டியில் மலையின் சிகரங்களில் மூன்று பெயர்ந்து போய்த் தொலைவில் விழுந்தன. அந்தச் சிகரங்களில் ஒன்றுதான் ஸ்ரீகாளத்திமலை.

இந்த மலையின் குடவரைக் கோயிலில் பஞ்சமுகேசுவரர் என்ற ஐந்துமுகங்கள் கொண்ட சிவபெருமான் காட்சியளிக்கிறார். இந்த ஐந்து முகங்களும் ஒவ்வொரு திக்கை நோக்கி அமைந்திருக்கின்றன. ஈசானம், அகோரம், வாமதேவம், சத்யோஜாதம், தத்புருஷம்: என்று அந்த முகங்களுக்குத் திருநாமம். இந்த பஞ்சமுகேசுவரரைப் பிரமன் ஸ்தாபித்துப் பூஜித்துப் பேறு பெற்றதாக லிங்கபுராணம் கூறுகிறது.

மற்ற இரண்டு சிகரங்களும் விழுந்த இடங்கள் முறையே திருச்சிராப்பள்ளி மலை, திரிகோணமலை என்பவை. உச்சிப்பிள்ளையார் கோயில் அமைந்துள்ள மலைதான் திருச்சி மலை என்று பெரியோர் கூறுகிறார்கள்.

° ° °

வாயு பகவான் பூசித்தத் திருத்தலம் இது. அறுபத்து மூன்று நாயன்மார்களுள் ஒருவரான திண்ணர் என்ற வேடர் இந்தத் தலத்தில் தான் கண்ணப்ப நாயனார் என்ற சிவப்பேறு பெற்றார். பக்தி செய்யும் நெறிக்கே உரைகல்லாக இவர் விளங்குகிறார்.

பிறப்பில் வேடராக இருந்ததால் தாம் சுவைத்துப் பார்த்து நன்றாக ருசியாக உள்ள மாமிசத் துண்டங்களையே இறைவனுக்கு அர்ப்பித்த உத்தமர் இவர். இறைவனுக்கு அபிஷேகம் செய்யத் தண்ணீர் கொண்டு வரப் பாத்திரம் கிடைக்காமல் கோயிலுக்குப் புறத்தே ஓடும் சொர்ணமுகி ஆற்று நீரைத் தன் வாயில் நிரப்பி வந்து அபிஷேகம் செய்த பக்தர்.

இப்படிப் பரவும் இவருடைய பக்தியை உலகத்துக்குக் காட்டவே காளஹஸ்தீசுவரர், தம் கண்ணில் இரத்தம் வருமாறு செய்தார். கொஞ்சமும் தயங்காமல் தம் கண்ணை அம்பால் தோண்டி இறைவனின் கண்ணில் பொருத்தினார் கண்ணப்பர். உடனே ரத்தம் நின்றது. ஆனால் இறைவனின் மற்றொரு கண்ணிலிருந்து உடனே ரத்தம் கொட்டத் தொடங்கியது. தம் இரண்டாவது கண்ணையும் தோண்டி எடுத்து விட்டால், இறைவன் முகத்தில் கண்ணைப்பொருத்தவேண்டிய இடம் தெரியாமற் போய்விடுமே என்று எண்ணி, தம் செருப்புச் காலைத் தூக்கி இறைவனின் கண் இருக்கும் இடத்தில் அடையாளமாக வைத்துக் கொண்டு தம் இன்னொரு கண்ணையும் தோண்டி எடுத்து இறைவனுக்குப் பொருத்தினார். இந்த அரியச் செயலினால் திண்ணனார் என்ற வேட்டுவப் பக்தரான இவர் கண்ணப்ப நாயனார் ஆனார்.

மூன்று சைவ சமயக் குரவர்களும் இந்தத் தலத்தைப் பாடியிருக்கிறார்கள்; கண்ணப்ப நாயனாரின் பக்தியைப் பற்றிப் பட்டினத்தார் பாடியிருக்கிறார்; ''கண்ணப்பனைப் போன்று நான் பக்திசெய்யவில்லையே?'' என்று தம்மையே நொந்து கொள்கிறார். இந்தத் தலத்தில் நக்கீரர், இந்திரன், ராமபிரான், மூசுகுந்தச் சக்கரவர்த்தி ஆகியோர் இறைவனைப் பூசித்துப் பேறு பெற்றனர் என்று தலபுராணம் கூறுகிறது. நக்கீரர் இந்தத் தலத்தைப் பற்றிப் பாடியுள்ள கைலைபாதி-காளத்திபாதி என்ற அந்தாதி பிரசித்தி பெற்றது.

இந்தத் தலத்தின் பெருமையைக் கருணைப் பிரகாசர், சிவப் பிரகாச சுவாமிகள், வேலப்ப தேசிகர் ஆகிய சகோதரர்கள் ஸ்ரீகாளத்தி நாதர் புராணத்தில் பாடியுள்ளனர். இந்தப் புராணம் காளாஹஸ்திக் கோயிலில் கிடைக்கிறது. இதைத் தவிர, ஸ்ரீ காளத்தி புராணம் என்ற வேறொரு நூலும் இருக்கிறது. இதைப்பாடியவர் வீரைநகர் ஆனந்தக் கூத்தர் என்ற புலவர்.

ஒருவரின் ஜாதகத்தில் ராகு கேதுக் கிரஹங்கள் சரியாக அமையப் பெறாவிடில் காளஹஸ்தி சென்று காளஹஸ்தீசுவரரையும் ஞான பரசூணாம்பிகையையும் வழிபடலாம்.

ஃ ஃ ஃ

அறுபத்து மூன்று நாயன்மார்களுள் முதலில்வைத்து எண்ணப்படுபவர் திருஞான சம்பந்தர். அவர் பல தலங்களைத் தரிசித்துக் கொண்டே செல்லுகையில் திருமறைக்காடு என்ற வேதாரண்யத்தில் திருநாவுக்கரசு சுவாமிகளுடன் தங்கியிருந்தார். அந்தச் சமயத்தில் சமணர்களை வாதில் வென்று சைவ சமயத்தை உயர்த்தும்படி பாண்டியன் மாதேவியாகிய மங்கையர்க்கரசி, ஞானக் குழந்தையாம் ஞான சம்பந்தருக்கு அழைப்பு விடுத்தாள்.

மதுரைக்குப் புறப்பட்டார் சம்பந்தப் பெருமான். அப்போது திருநாவுக்கரசர், ''ஐயனே நாளும் கோளும் நல்லவையாக இல்லை. தாங்கள் இந்த நேரத்தில் மதுரைக்குச் செல்வது நல்லது அன்று'' என்று கூறினார். உடனே சம்பந்தர் ''இறைவனின் அடியாருக்கு நாளும் கோளும் எப்போதும் நல்லனவே'' என்று கூறி, கோளறு பதிகம் பாடினார். ''இந்தக் கோளறுபதிகத்தைப் பாடினால் நவக்கிரகப் பிரீதி உண்டாகும்'' என்று ஸ்ரீகாஞ்சி பரமாசாரிய சுவாமிகளும் திருவாய் மலர்ந்திருக்கிறார்கள்.

கோளறு பதிகம் மொத்தம் பதினொரு பாடல்கள். அவற்றுள் முதல் பாடல் இது. இதை அன்றாடம் காலை மாலை சொல்லி வந்தால் நன்மைகள் விளையும்.

வேயுறு தோளிபங்கன் விடமுண்ட கண்டன்
மிக நல்ல வீணை தடவி
மாசறு திங்கள் கங்கை முடிமேல் அணிந்தென்
உளமே புகுந்த அதனால்

ஞாயிறு திங்கள் செவ்வாய் புதன் வியாழம் வெள்ளி
சனி பாம் பிரண்டுடனே
ஆசறு நல்ல நல்ல அவை நல்ல நல்ல
அடியா ரவர்க்கு மிகவே

தசாவதாரத் தோத்திரம் என்ற பத்து அவதாரங்களுக் குரிய நவக்கிரகத் தோத்திரம் இருக்கிறது. மகாவிஷ்ணு வின் ஒவ்வோர் அவதாரமும் ஒவ்வொரு நவக்கிரகத்துடன் தொடர்பு உடையதாக பராசர ஸம்ஹிதை கூறுகிறது. பக வான் நாராயணன் காக்கும் கடவுளானதால் இதைப் பாரா யணம் செய்தால் கேதுக் கிரகப் பிரீதி உண்டாகும்.

குளிகனையும் சேர்த்துக் கிரஹங்களைப் பத்தாக்கியிருக் கிறார்கள். ஸ்ரீ பலராமாவதாரம் குளிகன் சம்பந்தமுடை யது. ஸ்ரீ மத்ஸ்ய அவதாரம் கேதுக் கிரக சம்பந்தமுடை யது. அந்தத் தசாவதார ஸ்தோத்திரத்தைக் கீழே காணலாம்:

நிர்மக்ந ச்ருதிஜால மார்கண தசா
தத்த க்ஷணைர் வீக்ஷணை:
அந்தஸ் தந்வ திவார விந்த கஹநாந்
யௌதந்வதீ நாமபாம் |
நிஷ்ப்ரத்யூஹ தரங்க ரிங்கண மித:
ப்ரத்யூட பாதஸ்சடா
டோலாரோஹ ஸதோ ஹளம் பகவதோ
மாத்ஸ்யம் வபு: பாது ந: ||

ஒருவரின் ஜாதகத்தில் செவ்வாய் அமைந்திருப்பது போல கேதுவும் பலன் கொடுக்கும்; கேதுவைப் பிரீதி செய் தால், கேதுவின் தசாபுக்திக் காலங்களில் நன்மைகள் விளையும்.

கேதுவைப் பற்றிய காயத்திரி மந்திரமும், கவசமும், ஸ்தோத்திரமும், அஷ்டோத்தா சதநாம அர்ச்சனையும் கிரமமாகத் தரப்பட்டுள்ளன. ஒவ்வொருக் கிரகத்தையும்

துதித்து வணங்க, முறையொன்றையும் துதிகளையும் நம் முன்னோர் உருவாக்கித் தந்திருக்கின்றனர். நவக்கிரக ஆராதனை முறை என்ற நமது நூலில் இந்த வழிமுறைகளைக் காணலாம்; பரிகாரம் செய்து கொள்ளலாம்; தியானம் செய்யலாம்; பயன் பெறலாம்.

கேது பகவான் காயத்திரி

அச்வத்வஜாய வித்மஹே சூலஹஸ்தாய தீமஹி |
தந்ந: கேது: ப்ரசோதயாத் ||

கேது மந்த்ரம்

ஓம் அஸ்ய ஸ்ரீ கேது மஹா மந்த்ரஸ்ய—மதுச்சந்த ரிஷி: | காயத்ரீச் சந்த: | கேதுர் தேவதா, கேது க்ரஹ ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே வினியோக: |

கரந்யாஸம்

தூம்ர வர்ணாய அங்குஷ்ட்டாப்யாம் நம: | த்விபாஹவே தர்ஜனீப்யாம் நம: | கேதவே மத்யமாப்யாம் நம: | விக்ருதானனாய அனாமிகாப்யாம் நம: | க்ருத்ராஸன கதாய கனிஷ்ட்டிகாப்யாம் நம:—லம்பகாய கரதல கர ப்ருஷ்ட்டாப்யாம் நம: |

அங்கன்யாஸம்

தூம்ரவர்ணாய ஹ்ருதயாய நம: | த்விபாஹவே சிரஸே ஸ்வாஹா | கேதவே சிகாயை வஷட் | விக்ருதானனாய கவசாய ஹும் | க்ருத்ராஸனகதாய நேத்ரத்ரயாய வௌஷட் | பூர்ப்புவஸ்ஸுவரோமிதி திக்பந்த: |

த்யானம்

தாம்ர வர்ணம் த்விபாஹும் ச கேதும் ச விக்ருதானனம் |
க்ருத்ராஸனகதம் நித்யம் த்யாயேத் ஸர்வ பலாப்தயே |

லமித்யாதி மானஸபூஜையை இப்போது செய்யவேண்டும்.

மூலமந்த்ரம்

கேதும் க்ருண்வன்ன கேதவே பேசோ மர்யா அபேசஸே |
ஸமுஷத்பி ரஜாயதா: ||

ஸ்ரீ கேது கவசம்

ஓம் அஸ்யஸ்ரீ கேது கவச மஹாமந்த்ரஸ்ய | புரந்தர ரிஷி: | அனுஷ்டுப் ச்சந்த: | கேது க்ரஹோ தேவதா | மம கேதுக்ரஹ ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே வினியோக: |

(கரந்யாஸம்) தூம்ரவர்ணாய அங்குஷ்ட்டாப்யாம் நம: | த்விபாஹவே தர்ஜனீப்யாம் நம: | கேதவே மத்யமாப்யாம் நம: | விக்ருதானனாய அனாமிகாப்யாம் நம: | க்ருத்ராஸனாய கனிஷ்ட்டிகாப்யாம் நம: | லம்பகாய கரதல கர ப்ருஷ்ட்டாப்யாம் நம: |

(அங்கன்யாஸம்) தூம்ரவர்ணாய ஹ்ருதயாய நம: | த்விபாஹவே சிரஸே ஸ்வாஹா | கேதவே சிகாயை வஷட் | விக்ருதானனாய கவசாய ஹும் | க்ருத்ராஸனனாய நேத்ர த்ரயாய வௌஷட் | லம்பகாய அஸ்த்ராய பட் | பூர்ப்புவ ஸ்ஸுவரோம்இதி திக்பந்த: |

த்யானம்

தூம்ரவர்ணம் த்வஜாகாரம் கதாவரகரத்வயம் |
சித்ராம்பரதரம் கேதும் சித்ரகந்தானுலேபனம் ||
வைடூர்யாபரணம் சைவ வைடூர்ய மகுடோஜ் ஜ்வலம் |
சித்ரம் கபோதமாருஹ்ய மேரும் யாந்தமதக்ஷிணம் ||
கேதும் கராளவதனம் சித்ரவர்ணம் கிரீடினம் |
ப்ரணமாமி ஸதாதேவம் த்வஜாகாரம் க்ரஹேச்வரம் ||

லமித்யாதி பூஜையை இங்கே செய்ய வேண்டும்.

கவசம்

சித்ரவர்ணச் சிர: பாது பாலம் மே தூம்ரவர்ணக: |
பாது நேத்ரே பிங்கலாக்ஷ: ச்ருதீ மே ரக்தலோசன: ||

க்ராணம் பாது ஸுவர்ணாப: வதனம் ஸிம்ஹிகாஸுத: |
பாது கண்ட்டம் ச மே கேது: ஸ்கந்தௌ பாது
க்ரஹாதிப: ||
பாஹூ பாத்வஸுர ச்ரேஷ்ட்ட: குக்ஷிம் பாது மஹோதர: |
ஸிம்ஹாஸன: கடிம் பாது மத்யம் பாது மஹாஸுர: ||
ஊரூ பாது மஹாசீர்ஷ: ஜானுநீச ப்ரகோபன: |
பாது பாதௌ ச மே ரௌத்ர: ஸர்வாங்கம் ரவிமர்தக: ||

பலச்ருதி:

ய இதம் கவசம் கேதோ: ஸர்வரோக நிவாரணம் |
பக்தியுக்த: படேந்நித்யம் ஸர்வ துக்கைஸ் ஸ முச்யதே ||

ஸ்ரீகேது தோத்திரம்

ஓம் அஸ்யஸ்ரீ கேது ஸ்தோத்ர மஹாமந்த்ரஸ்ய | வாம தேவரிஷி: | அனுஷ்டுப் ச்சந்த: | கேதுர் தேவதா | கேது க்ரஹ ப்ரஸாத ஸித்த்யர்த்தே ஜபே வினியோக: |
ஆத்ய: கராளவதன: த்விதீயோ ரக்தலோசன: |
த்ருதீய: பிங்களாக்ஷஸ்ச சதுர்த்தோ க்ஞானதாயக: ||
பஞ்சம: கபிலாக்ஷஸ்ச ஷஷ்ட்ட: காலாக்னி ஸன்னிப: |
ஸப்தமோ ஹிமகர்பஸ்ச தூம்ரவர்ணோ அஷ்டமஸ்ததா ||
நவம: க்ருத்ம: கண்ட்டஸ்ச தசமோ நரபீடக: |
ஏகாதசஸ்து ஸ்ரீகண்ட: த்வாதசஸ்து கதாதர: ||
த்வாதசைதே மஹாக்ருரா: ஸர்வோபத்ரவகாரகா: |
பர்வகாலே பீடயந்தி திவாகர நிசாகரௌ ||

பலச்ருதி:

நாமத்வாதசகம் ஸ்தோத்ரம் கேதோரேதத்மஹாத்மன: |
படந்தி யே அந்வஹம் பக்த்யா தேப்ய: கேது: ப்ரஸீததி |
குலுத்ததான்யே விலிகேத் ஷட்கோணம் மண்டலம் சுபம் |
பத்மமஷ்டதளம் தத்ர விலிகேச்ச விதானத: ||
நீலம் கடம் ச ஸம்ஸ்த்தாப்ய திவாகர நிசாகரௌ |
கேதும் ச தத்ர நிக்ஷிப்ய பூஜயித்வா விதானத: ||
ஸ்தோத்ர மேதத்படித்வாச த்யாயன் கேதும் வரப்ரதம் |
ப்ராம்ஹணம் ச்ரோத்ரியம் சாந்தம் பூஜயித்வா குடும்பினம்

கேதோ கராளவகத்ரஸ்ய ப்ரதிமாம் வஸ்த்ர ஸம்யுதாம்
கும்பாதிபிச்ச ஸம்யுக்தாம் சித்ராதாரே ப்ரதாபயேத் |
தானேனானேன ஸுப்ரீத: கேது: ஸ்யாத்
தஸ்யஸௌக்யத: |
வத்ஸரம் ப்ரயதா பூத்வா பூஜயித்வா விதானத: |
மூலமஷ்டோத்தர சதம் யே ஜபந்தி நரோத்தமா: |
தேஷாம் கேது ப்ரஸாதேன ந கதாசித் பயம் பவேத் ||

கேது அஷ்டோத்தர சதநாம ஸ்தோத்ரம்

ச்ருணு நாமானி ஜப்யானி சேதோரத மஹாமதே |
கேதுஸ்தூல சிரச்சைவ சிரோமாத்ரோ த்வஜாக்ருதி: |
நவக்ரஹயுத: ஸிம்ஹிகாஸுரீ கர்ப்பஸம்பவ: ||
மஹாபீதிகரச் சித்ரவர்ண: ஸ்ரீ பிங்களாக்ஷக: |
புல்லதூம ஸகாச தீக்ஷ்ணதம்ஷ்ட்ரோ மஹோரக: ||
ரக்த நேத்ர சித்ரகாரீ தீவ்ரகோபோ மஹாஸுர: |
க்ரூரகண்ட்ட: க்ரோதநிதி: சாயாக்ரஹ விசேஷக: ||
அந்த்யக்ரஹோ மஹாசீர்ஷ: ஸூர்யாரி: புஷ்பவத் க்ரஹீ |
வரஹஸ்தோ கதாபாணிச் சித்ர வஸ்த்ர தரஸ்ததா || 4
சித்ரத்வஜபதாகச்ச கோரச்ச சித்ராதச் சிகீ—
குலுத்தபக்ஷகச்சைவ வைடூர்யாபரணஸ்ததா || 5
உத்பாத ஜனகச்சுக்ர மித்ரோமந்தஸகஸ்ததா |
கதாதரோ நாகபதி: அந்தர்வேதீச்வராய ச || 6
ஜைமினி கோத்ரஜச் சித்ரகுப்தாத்மா தக்ஷிணாமுக: |
முகுந்தவரபாத்ரச்ச மஹாஸுர குலோத்பவ: || 7
கனவர்ணோ லம்பதேவ: ம்ருத்யுபுத்ரஸ்ததைவ ச |
உத்பாதரூபதாரீ சாத்ருச்ய: காலாக்னிஸந்நிப: || 8
ந்ருபிடோ க்ரஹகாரீச ஸர்வோபத்ரவ வாரக: |
சித்ராப்ரஸூதோஹ்யநல: ஸர்வவ்யாதி-வினாசக: || 9
அபஸவ்யப்ரசாரீச நவமே பாபதாயக: |
பஞ்சமே சோகதச் சோபராக கேசர ஏவ ச || 10
அதிபூருஷகர்மா ச துரீயே து ஸுகப்ரத: |
த்ருதீயே வைரத: பாபக்ரஹச்ச ஸ்போடகாரக: || 11
ப்ராணநாத: பஞ்சமே து ச்ரமகாரக ஏவ ச: |
த்விதீயே ஸ்புடவாக்தாதா விஷாகுலித வக்த்ரக: || 12

காமரூபீ ஸிம்ஹதந்த: குசேத்மப்ரிய ஏவ ச |
சதுர்த்தே மாத்ருநாசஸ்ச நவமே பித்ரு நாசக: || 13
அந்த்யே வைப்ரதச்சைவ ஸுநானந்த நிதானக: |
ஸர்பாக்ஷிஜாதோ அநங்கச்ச கர்மராச்யுத் பவஸ்ததா || 14
உபாந்தே கீர்திதச்சைவ ஸப்தமே கலஹப்ரத: |
அஷ்டமே வ்யாதிகர்தா ச தனே பஹுஸுகப்ரத: || 15
ஜனனே ரோகதச்ச ஊர்த்வமூர்த்தஜோ க்ரஹநாயக: |
பாபத்ருஷ்டி: கோரச்ச சாம்பவோ அசேஷ பூஜித: || 16
சாச்வதச்ச நடச்சைவ சுபாசுப பலப்ரத: |
தூம்ரச்சைவ ஸுதாபாயீ ஹ்யஜிதோ பக்தவத்ஸல: || 17
ஸிம்ஹாஸன: கேதுமூர்த்தி: ரவீந்துத்யுதிநாசக: |
அமர: பீடகோ அமர்த்ய: விஷ்ணுத்ருஷ்டோ
அஸுரேச்வர: || 18
பக்தரக்ஷோ அதவைசித்ர கபோதஸ்யந்தஸ்ததா |
விசித்ர பலதாயீச பக்தாபீஷ்டபலப்ரத: || 19
யோ பக்த்யேதம் ஜபேத் கேது நாம்னாம்
அஷ்டோத்தர சதம் |
ஸ து கேதோ: ப்ரஸாதேன ஸர்வாபீஷ்டம்
ஸமாப்னுயாத் || 20

ஸ்ரீ கேது அஷ்டோத்தர சத நாமாவளி

ஓம் கேதவே நம:
ஸ்தூலசிரஸே
சிரோமாத்ராய
த்வஜாக்ருதயே
நவக்ரஹயுதாய
ஸிம்ஹிகாஸுரீகர்ப்ப ஸம்பவாய
மஹாபீதிகராய
சித்ரவர்ணாய
ஸ்ரீ பிங்களாக்ஷகாய
புல்ல தூம ஸகாஶாய 10
தீக்ஷ்ணதம்ஷ்ட்ராய
மஹோதராய
ரக்தநேத்ராய
சித்ரகாரிணே
தீவ்ரகோபாய
மஹாஸுராய
க்ரூரகண்ட்டாய
ஓம் க்ரோதநிதயே நம:
சாயாக்ரஹவிசேஷகாய
அந்த்யக்ரஹாய 20
மஹாசீர்ஷாய
ஸூர்யாரயே
புஷ்பவத் க்ரஹிணே
வரஹஸ்தாய
கதாபாணயே
சித்ர வஸ்த்ர தராய
சித்ரத்வஜ பதாகாய
கோராய
சித்ரரதாய
சிகினே 30
குலுத்தபக்ஷகாய
வைடூர்யாபரணாய
உத்பாதஜனகாய
சுக்ரமித்ராய
மந்தஸகாய

ஓம் கதாதராய நம:
நாகபதயே
அந்தர்வேதீச்வராய
ஜைமினீகோத்ரஜாய
சித்ரகுப்தாத்மனே 40
தக்ஷிணாமுகாய
முகுந்தவரபாத்ராய
மஹாஸுர குலோத்
பவாய
கனவர்ணாய
லம்பதேவாய
ம்ருத்யுமித்ராய
உத்பாதரூபதாரிணே
அத்ருஶ்யாய
காலாக்னிஸந்நிபாய
ந்ருபீடாய 50
க்ருஹகாரிணே
ஸர்வோபத்ரவ வாரகாய
சித்ராப்ரஸூதாய
அனலாய
ஸர்வவ்யாதி விநாசகாய
அபஸவ்ய ப்ரசாரிணே
நவமே பாபதாயகாய
பஞ்சமே சோகதாய
உபராக கேசராய
அதிபூருஷகர்மணே 60
துரீயே ஸுகப்ரதாய
த்ருதீயே வைரதாய
பாபக்ரஹாய
ஸ்போடககாரகாய
ப்ராணநாதாய
பஞ்சமே ச்ரமகாரகாய
த்விதீயே அஸ்புட
வாக்தாத்ரே
விஷாகுலித வக்த்ராய
காமரூபிணே
ஸிம்ஹதந்தாய 70
குசத்தமப்ரியாய

ஓம் சதுர்த்தே மாத்ருநாசாய
நவமே பித்ருநாசகாய
அந்த்யே வைர ப்ரதாய
ஸுதானந்தநிதானகாய
ஸர்பாக்ஷீஜாதாய
அனங்காய
கர்மராச்யுத்பவாய
உபாந்தே கீர்திதாய
ஸப்தமே கலஹ
ப்ரதாய 80
அஷ்டமே வ்யாதிகர்த்ரே
தனே பஹுஸுகப்ரதாய
ஜனனே ரோகதாய
ஊர்த்வமூர்த்தஜாய
க்ரஹநாயகாய
பாபத்ருஷ்டயே
கேசராய
அசேஷ பூஜிதாய
சாச்வதாய 90
நடாய
சுபாசுபபலப்ரதாய
தூம்ராய
ஸுதாபாயினே
அஜிதாய
பக்தவத்ஸலாய
ஸிம்ஹாஸனாய
கேது மூர்தயே
ரவீந்துத்யுதிநாசகாய
அமராய 100
பீடகாய
அமர்த்யாய
விஷ்ணுத்ருஷ்டாய
அசுரேச்வராய
பக்தரக்ஷாய
வைசித்ர்ய கபோத
ஸ்யந்தனாய
விசித்ர பலதாயினே
பக்தாபீஷ்ட பலப்ரதாய

கேது பகவான் என்ற நூல் முற்றிற்று

|| சுபம் ||